# நூறு நாள் வேலையே இனி இல்லை என

# கிராம மக்களின் வாழ்வாதாரத்தை அழிக்கும் பா.ஜ.க. - அ.தி.மு.க.வை கண்டித்து ஆர்த்தெழுந்த காட்சி!



விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சிஒன்றியம் மற்றும் மேல்மலையனூர் ஒன்றிய தி.மு.க. சார்பில்100 நாள் வேலைத்திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும் ஒத்து ஊதும்அதிமுகவை கண்டித்துநடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தலைமைதாங்கிகண்டன உரை நிகழ்த்தினார். உடன் தோழமைக் கட்சி நிர்வாகிகள் ரங்க பூபதி, ஏ.கே.மணி , முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ் செல்வன், செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார்,மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொத்தியார் அலிமஸ்தான், ஒன்றிய செயலாளர்கள்நெடுஞ்செழியன், விஜயராகவன், பச்சையப்பன், நாராயணமூர்த்தி, சாந்தி சுப்பிரமணியன் , மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த் உள்ளிட்ட தோழமைக் கட்சி நிர்வாகிகள்கலந்து கொண்டு ஒன்றிய பா.ஜ.க. அரசையும் ஒத்து ஊதும் அ.தி.மு.க.வைக் கண்டித்து கண்டன கோஷமிட்டனர்.



வேலூர் வடக்கு மாவட்டம் காட்பாடி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு 100நாள் வேலை திட்டத்தை குழிதோண்டி புதைக்கும் ஒன்றிய பா.ஜ.க., அ.தி.மு.க.வைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் கலந்து கொண்டு கண்டனபேருரை ஆற்றினார். உடன் மாவட்டப் பொருளாளர் சி.நரசிம்மன், ஒன்றிய குழு தலைவர் வேல்முருகன், துணை தலைவர் சரவணன், ஒன்றிய கழக செயலாளர்கள் எஸ்.தணிகாசலம்,கே.கருணாகரன்,சி.ரவி, மண்டல குழு தலைவர் புஷ்பலதா, வள்ளிமலை ஊராட்சி மன்ற தலைவர் வாசுகி, மற்றும் காங்கிரஸ், கம்யூனிஸ்ட், விடுதலை சிறுத்தைகட்சியினர் கலந்து கொண்டனர்.



அண்ணல் காந்தியடிகள் பெயரை நீக்கி 100 நாள் வேலை திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க அரசையும் ஒத்து ஊதும் அதிமுகவையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் திருவள்ளூர் மேற்கு மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ தலைமையில் ஆர்.கே.பேட்டை கிழக்கு ஒன்றிய செயலாளர் பா.சம்பத் முன்னிலையில் இரா.கி.பேட்டை இந்தியன் வங்கி எதிரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இதில் கழகத்தினர் கூட்டணி கட்சி நிர்வாகிகள் பெண்களும் பொதுமக்களும்என 3000 த்திற்கு மேற்பட்டோர் திரளாக கலந்துக் கொண்டு கண்டன முழக்கமிட்டனர் உடன் மாவட்ட இளைஞர்கள் அமைப்பாளர் ம. கிரண், மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.



அண்ணல் காந்தியின் பெயரில், 100 நாள் அரசு வேலை திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க அரசையும், ஒத்து ஊதும் அ.தி.மு.க வையும் கண்டித்து காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க புனித தோமையார் மலை வடக்கு ஒன்றியம் மதச்சார்பற்ற முற்போக்கு கட்சிகளின் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று (24.12.2025) புனித தோமையார் மலை வடக்கு ஒன்றிய செயலாளர் ஜி.கே.ரவி [எ] விவேகானந்தன் தலைமையில் நடைபெற்றது. இதில் கழக தலைமை தீர்மானக் குழு செயலாளர் மீ.அ. வைத்தியலிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். ஆர்.ராஜா, இ. கருணாநிதி ஆகியோர் கண்டன உரையாற்றினர். இதில் மாவட்ட, ஒன்றிய, நகர நிர்வாகிகள், கூட்டணிக் கட்சித் தலைவர்கள், கழக உறுப்பினர்கள், மேயர், துணை மேயர், கழக அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.



திருப்போரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, திருப்போரூரில் மாவட்டச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆலோசனைப்படி, 100 நாள் வேலைத் திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை திரும்பப் பெற ஒன்றிய பா.ஜ.க. அரசையும், அதற்கு ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பாக மாபெரும் கண்டனம் ஆர்ப்பாட்டம் வடக்கு ஒன்றியச் செயலாளர், ஒன்றிய பெருந்தலைவர் எஸ்.ஆர்.எல். இதயவர்மன் தலைமையில் தெற்கு ஒன்றியச் செயலாளர் பையனூர் எம்.சேகர் வரவேற்புரையில் பேரூராட்சி மன்ற தலைவர், பேரூர் செயலாளர் மு. தேவராஜ் முன்னிலையில் மாவட்ட துணைச் செயலாளர் டி.மூர்த்தி, தொகுதி பார்வையாளர் எஸ்.எம்.கே.அண்ணாதுரை ஆகியோர் கண்டன உரை ஆற்றினார். இதில் கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தை அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வரும் ஒன்றிய அரசை கண்டித்து சேலம் மாவட்டம் காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலக முன்பு நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா கலந்து கொண்டு கிராமபுற பொருளாதாரத்தை முடக்க முயற்சிக்கும் ஒன்றிய பாஜக அரசுக்கு எதிரான முழக்கங்களை எழுப்பினார். இந்த ஆர்ப்பாட்டத்தில் 2000க்கும் மேற்பட்ட ஊரக வேலைவாய்ப்பு திட்ட பணியாளர்கள் கலந்து கொண்டு ஒன்றிய அரசுக்கு எதிராகவும் பா.ஜ.க. அரசுக்கு துணை போகும் அதிமுகவிற்கு கண்டனம் தெரிவித்து முழக்கங்களை எழுப்பினர் ஆர்ப்பாட்டத்தில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் பெருமளவில் கலந்து கொண்டனர்



வேலூர் தெற்கு மாவட்டம் அணைக்கட்டு பேருந்து நிலையம் அருகில் 100நாள் வேலை திட்டத்தை குழிதோண்டி புதைக்கும் ஒன்றிய பா.ஜ.க அரசுக்கு ஒத்து ஊதும் அ.தி.மு.க.வைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் தெற்கு மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்த குமார் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு கண்டனப் பேருரை ஆற்றி கண்டன முழக்கங்கள் எழுப்பினர். இதில் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு மத்திய ஒன்றிய செயலாளர் வெங்கடேசன், கிழக்கு ஒன்றியச் செயலாளர் கோ.குமரபாண்டியன், பேரூராட்சி செயலாளர்கள் ஜாகீர் உசேன் ,பெருமாள் ராஜா இந்திய கூட்டணி கட்சி மாவட்டச் செயலாளர்கள் மாநகர செயலாளர்கள் துணை செயலாளர்கள் உள் ளாட்சி பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் பல்லாயிரக்கணக்கான பொது மக்கள் கலந்து கொண்டனர்.



தருமபுரி மேற்கு மாவட்டத்தில் 100 நாள் வேலை திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை திரும்பப்பெற வலியுறுத்தியும், ஒன்றிய பா.ஜ.க அரசையும், அதற்கு ஒத்து ஊதும் அ.தி.மு.கவைக் கண்டித்தும் பாப்பிரெட்டிப்பட்டி, கடத்தூர், தருமபுரி, காரிமங்கலம் மற்றும் பாலக்கோடு ஆகிய 5 ஒன்றியங்களில் வட்டார வளர்ச்சி அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்ட கழக செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கு.தங்கராசு, பொன்.அய்யனார், வேலன், தமிழ்அன்வர், அதியமான், கமலா மூர்த்தி, மணி, முத்து, சுகவனம், குமரவேல், தவமணி, சக்திவேல், ராஜா, அஸ்லாம், முனியப்பன், சஜீர் ஆகியோர் கண்டன உரையாற்றினர். ரா. சித்தார்த்தன், சி.முத்துக்குமார், பி.எஸ்.சரவணன், கொ.ஜெயச்சந்திரன், கு.கௌதமன், M.மாரி மற்றும் கழக நிர்வாகிகள், மதச் சார்பற்ற கூட்டணி கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் ஆகியோர் திரளாக கலந்து கொண்டனர்.



அண்ணல் காந்தியடிகள் பெயரை நீக்கி 100 நாள் வேலைத்திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பாஜக அரசையும் ஒத்து ஊதும் அதிமுகவையும் கண்டித்து திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் மீஞ்சூர் கிழக்கு மேற்கு வடக்கு , தெற்கு திமுக மற்றும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் மீஞ்சூரில் நடைபெற்றது இதில் மாவட்ட கழக செயலாளர் வல்லூர் எம். எஸ்.கே.ரமேஷ்ராஜ் கண்டன உரையாற்றினார் உடன் சட்ட மன்ற உறுப்பினர் துரைசந்திரசேகர், ஏ.ஆர்.டி.உதயசூரியன், ஆ.ராஜா, மு.முரளிதரன், நா.ஜெகதீசன், கே.சுப்பிரமணியம், வெ.அன்புவாணன், ருக்மணி மோகன்ராஜ், க.சு.தமிழ்உதயன், ஜி.ரவிக்குமார், ப.து.தமிழரசன் உள்பட கழகத்தினர் கூட்டணி கட்சி நிர்வாகிகள் 3000 த்திற்கு மேற்பட்டோர் கலந்து கொண்டார்கள்.